**செய்தி வெளியீடு எண்:191** **நாள்: 07.04.2017**

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

"பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா" என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் பயன்பெறக் கூடிய பயனாளிகளைக் கண்டறிந்து இத்திட்டத்தின் கீழ் வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவதாகக் கூறி சில தனிநபர்கள் / நிறுவனங்கள், தகவல்கள் மற்றும் பணம் திரட்டுவதாக மத்திய அரசின் கவனத்துக்கு வந்துள்ளது. ஆனால், இத்திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற ஏதுவாக தனிநபரையோ அல்லது நிறுவனத்தையோ மத்திய அரசு அங்கீகரிக்கவில்லை என மத்திய அரசு தெளிவுபடுத்தி உள்ளது. மேலும், இத்திட்டம் தொடர்பாக அனுமதியற்ற வகையில் பெயரையோ, சின்னத்தையோ பயன்படுத்துவோர் தண்டனைக்குரிய நடவடிக்கைக்கு உள்ளாவர்.

இத்திட்டத்தின் கீழ் தேவைக் கணக்கெடுப்பை இலவசமாக நடத்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பணிக்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் துறையின் இணைய தளத்தில் இத்திட்டத்தால் பயன் பெறக் கூடிய பயனாளிகள் நேரடியாக பதிவு செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, மாநில அரசு / யூனியன் பிரதேசங்களின் பொது சேவை மையத்தில், மிகக் குறைந்த பதிவுக் கட்டணமாக ரூ.25/– (ரூபாய் இருபத்தைந்து) மற்றும் சேவைக் கட்டணம் செலுத்தி இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

எனவே, “பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா” திட்டத்தின் கீழ் பதிவு செய்ய மத்திய அரசின் அனுமதி பெற்ற நபர்கள் என கூறிக் கொண்டு, தகவல்கள் மற்றும் பணம் திரட்டும் எந்த தனிநபர் / நிறுவனத்தையும் பொது மக்கள் நம்ப வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**